1970 மார்ச் 7] [திரு. மு. கருணாநிதி]

இந்த அவையில் எவ்வளவோ சபாநாயகர்கள் இருந்திருக்கிறார்கள். சில மரபுகளை யொட்டித்தான் இந்தச் சபை நடந்து கொண்டிருக்கிறது. எந்த ஒரு குற்றச்சாட்டைப் படிப்பதாக இருந்தாலும் அதற்கு ஆதாரமான கடிதங்களை இங்கு வைப்பதாக யிருந்தால் அதன் ஒரு படியை, ஒரு பிரதியை, சபாநாயகர் அவர்கள் கையில் கொடுத்துவிட்டுத்தான் படிக்கவேண்டும். அதில் இருப்பதைத்தான் படிக்கிறாரா இல்லையா என்று தெரிந்து கொள்ள சபாநாயகர் அவர்களிடம் ஒரு பிரதியைக் கொடுத்து விட்டுப் படிப்பது நல்லது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: இதன் பிரதியை திங்கட்கிழமை காலையில் கொடுத்துவிட்டு திங்கட்கிழமை படிக்க அனுமதி கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால் திங்கட்கிழமை அன்று படியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, ...

(4) நடை முறைக் கேள்வி.

உறுப்பினர்களுக்கு அவர்களுடைய உரையின் படிவத்துடன், அவ்வுரையின் இடையில் செய்யப்படும் அமைச்சர், மற்றவருடைய குறுக்கீடுகளின் படிவமும் சேர்ந்து அனுப்பாதது குறித்து.

திரு. ரா. ராமச்சந்திர துரை: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த விதி மீறப்பட்டிருக்கிறது?

திரு. ரா. ராமச்சந்திர துரை: விதி 234.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதில்,

'An official report of the proceedings of the Assembly shall be published under the supervision of the Secretary and shall be made available to every member.'

என்று சொல்லப் பட்டிருக்கிறது. அது எந்த வகையில் மீறப்பட்டிருக்கிறது?

திரு. ரா. ராமச்சந்திர துரை: அதில் தப்பு நடந்திருக்கிறது. தலைவர் அவர்களே, ஒவ்வொரு உறுப்பினரும் பேசும் பேச்சுக்கள் அவர்களுடைய கவனத்திற்கு அனுப்பப்படுகிறது. முன்பெல்லாம் அந்தப் பேச்சுக்களைக் கொடுக்கிற நேரத்தில் அந்தப் பேச்சுக் குறிப்பு, அமைச்சர்கள் குறுக்கீடுகள் செய்வது அல்லது அங்கத்தினர்கள் குறுக்கீடு செய்வது இவை எல்லாம் வரும். அந்தப் பிரதியில், சட்டசபையில் செய்த குறுக்கீடுகளும், குறிப்பில் வந்ததற்கும் வித்தியாசம் இருக்கிறதா என்பதை அப்போதுதான் புரிந்து கொள்ள முடியும். ஆனால் இப்போது உறுப்பினர்களின் பேச்சுக்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டும் வரவேண்டுமென்று சொல்கிறீர்கள். உங்கள் பேச்சு மட்டும் வருகிறது. இடையிலுள்ள அமைச்சர்களின் குறுக்கீடுகள் வரவில்லை என்று சொல்கிறீர்கள். அதை உங்களுக்கு அனுப்புவது அது நீங்கள் கூறியது தானா அல்லது வேறுவிதமாக இருக்கிறதா என்று பார்ப்பதற்காகத்தான் உங்கள் பேச்சின்பிரதி உங்களுக்கு அனுப்பப்படுகிறதே தவிர மற்றதற்காக அல்ல. ஆகவே அமைச்சர்களின் குறுக்கீடுகள் போன்ற மற்ற பேச்சுக்களை உறுப்பினர்களுக்கு அனுப்ப வேண்டும் என்பது முறையல்ல. ஆகவே அதில் எந்த விதமான பாயின்ட் ஆஃப் ஆர்டரும் இல்லை.

(5) 1970-71-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** சபாநாயகரவர்களே, இந்த பட்ஜெட் விவாதத்திலே ஓரிரு கருத்துக்களை எங்கள் கட்சியின் சார்பாக இந்த அவையின் முன் வைக்கின்றேன். முதலிலே நமது வரவு-செலவுக் கணக்குத் திட்டத்தை மாண்புமிகு நிதியமைச்சரவர்கள், மத்திய வரவு-செலவுத் திட்டத்திற்கு முன்பு தாக்கல் செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 2½ மணிநேரம் தான் இருக்கிறது. 1 மணிக்கு 'கில்லட்டின்'. வாக்கெடுப்பு நடைபெற வேண்டும். அமைச்சரவர்களுக்கு எவ்வளவு நேரம் வேண்டும், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எவ்வளவு நேரம் வேண்டுமென்று சொல்லிவிட்டால் நல்லது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: எனக்கு 1½ மணி நேரம் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு 1½ மணி நேரம் வேண்டுமென்று சொன்னால் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேச முடியாது, மற்றவர்கள் பேச முடியாது. திரு. பூவராகனுக்கு 15 நிமிஷங்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இப்பொழுதே 'அலாட்' பண்ணிவிடுவது நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரவர்களுக்கு ஒரு மணி நேரம். எதிர்க் கட்சித் தலைவர்கள் 11 மணிக்கு ஆரம்பித்து 12 மணிக்குள் முடித்து விட்டார்கள் என்றால் சரியாக இருக்கும். அந்த அரை மணி நேரத்தை திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் மற்றவர்களும் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இப்படி மத்திய சர்க்கார் சுங்க வரியை அதிகப்படுத்திய காரணத்தால், மாநில சர்க்காரும் விற்பனை வரியை அதிகப்படுத்திய காரணத்தால் விலைவாசிகள்